செய்தி வெளியீடு எண்: 546 நாள்:27.08.2019

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் மாநில சாலைப் பாதுகாப்புக் குழு கூட்டம் 27.08.2019ம் நாளன்று மாலை 3.30 மணிக்கு தலைமைச் செயலாளர் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், நிதித்துறை செயலாளர், நெடுஞ்சாலைத் துறை செயலாளர், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், போக்குவரத்துத் துறை செயலாளர், காவல் துறை இயக்குநர் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்று மாநில அளவில் எடுக்க வேண்டிய பல்வேறு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. போக்குவரத்து ஆணையர் அவர்கள் தமிழகத்தில் விபத்து பற்றிய விபரங்களை குழுவிற்கு எடுத்துரைத்தார்.

மேலும் தமிழகத்தில் சாலை விபத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மொத்த எண்ணிக்கை ஜனவரி 2018 முதல் ஜுலை 2018 வரை 7526 மற்றும் அதைத் தொடர்ந்து ஜனவரி 2019 முதல் ஜுலை 2019 வரை 6522. இது கடந்த ஆண்டை விட 13 சதவீதம் உயிரிழப்புகள் குறைந்துள்ளது. தமிழகத்தில் 2018ம் ஆண்டு ஜுலை வரை 5,559 கொடுங்காய விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது. 2019ம் ஆண்டு ஜுலை வரை 2979 கொடுங்காய விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 15 சதவீதம் குறைந்துள்ளது.

மேலும், மொத்த உயிரிழப்பு விபத்துகளில் இரு சக்கர வாகனங்களில் மட்டும் 41 சதவீதமும் மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் 27 சதவீதமும் ஏற்பட்டுள்ளது. இரு சக்கர வாகனங்களில் இறந்தவர்களில் 54 சதவீதம் பேர் தலைக்கவசம் அணியாததால் ஏற்பட்டதாகும்.

ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சாலை பாதுகாப்பு கூட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. அம்மாவட்டங்களில் தொடர்ந்து ஏற்படும் விபத்துகளை ஆராய்ந்து விபத்துக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு (Black spot) அது சீர் செய்யப்பட்டு விபத்துக்கள் குறைய ஒரு காரணமாக அமைந்தது.

ஐக்கிய நாடு சபையின் விபத்து குறைப்பின் நோக்கமாக 50 விழுக்காடுகள் 2020ற்குள் குறைக்கப்பட வேண்டும். (United Nations Sustainable Development Goal) என்ற குறிக்கோளினை அடையும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விபத்து குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதனை நோக்கி துறை பயணிக்கிறது.

மேலும், நிருபய்யா கமிட்டியின் பரிந்துரையின்படி போக்குவரத்து வாகனங்களை கண்காணிக்கும் பொருட்டு , வாகன இருப்பிடத்தை கண்டறியும் கருவி (Vehicle Location Tracking Device) ஆபத்து காலங்களில் உபயோகிக்கும் பொத்தானுடன் பொருத்தப்பட்டு வாகனங்கள் இயக்கப்பட அனைத்து நடவடிக்கைகளிலும் எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பான பயணம் செய்ய ஏதுவாக இருக்கும்.

தமிழகத்தில் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பினை குறைத்ததற்கு, அவசர ஊர்தி 108 பெரும்பங்கு வகித்து வருகிறது. தற்போது அரசின் கட்டுப்பாட்டில் 936 அவசர ஊர்திகள் உள்ளது. இதனுடன் தனியார் அவசர ஊர்திகள் சுமார் 5000 வாகனங்களையும் ஒரே அழைப்பு எண்ணுடன் இணைப்பதன் மூலம் மேலும் குறுகிய நேரத்திற்குள் விபத்து நடந்த இடத்தை அடைந்து உயிரிழப்பினை குறைக்கலாம்.

அதுபோல, தமிழகத்தில் தற்போது அரசால் இயக்கப்பட்டு வரும் 86 அவசர சிகிச்சை மையங்களுடன் தனியார் அவசர சிகிச்சை மையங்களையும் இணைப்பதன் மூலம் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க உதவும்.

விபத்து ஏற்பட ஓட்டுநரின் பங்கு 98.39 விழுக்காடுகள் உள்ளது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதனை சீர் செய்யும் பொருட்டு, பொதுமக்கள் ஓட்டுநர் உரிமம் பெற வரும்போது, அவர்களுக்கு அனைத்து போக்குவரத்து விதிகள், சைகைகள் சம்பந்தமான தகுதி எழுத்து தேர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதுபோல தானியங்கி ஓட்டுநர் தேர்வுத் தளம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தேர்வுத் தளங்கள் அனைத்தும் கண்காணிப்பு கேமரா பொறுத்தப்பட்டு, ஓட்டுநர் தேர்வின் தரம் மேம்படுத்தப்படும்.

தேசிய, மாநில, மாவட்ட மற்றும் ஊரக கட்டுப்பாட்டில் உள்ள பொதுச்சாலையினை செப்பமினிடும்போது, அனைத்து விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும். மேலும் கட்டுமானக் கழிவுகளை சாலையிலேயே குவித்துவருவதால் பெரும் விபத்து நடக்கின்றது. எனவே, சம்பந்தப்பட்ட துறையின்மூலம் ஒப்பந்ததாரர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் மாநில நெடுஞ்சாலை துறையினர் உதகை, ஏற்காடு, கொடைக்கானல், கொல்லிமலை திம்பம் போன்ற மலைப்பிரதேசங்களில் இடத்திற்கேற்ப ஆபத்து தடுப்பானினை (Crash barrier) வடிவமைத்து விபத்தினை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள டோல்கேட்டில் ஏற்படும் வாகன நெரிசல் மற்றும் அதனால் ஏற்படும் விபத்தினை தவிர்க்கும் பொருட்டு மத்திய அரசால் பாஸ்ட் டாக் (Fastag) முறை (மின்னணு முறையில் Toll Fee செலுத்தும் முறை) 01.12.2019 முதல் அறிமுகப்படுத்தபடவுள்ளது.

மேலும், தலைமைச் செயலாளர் அவர்கள் ஓட்டுநர் தேர்வு நடத்துவதற்கு முன்பாக சிமுலேட்டர் (Simulator) மூலமாக பயிற்சி பெற்ற பின் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட வேண்டும் என்றும். தேசிய நெடுஞ்சாலைகளில் (நான்கு வழிச்சாலைகளில்) கிராமங்கள் அல்லது குடியிருப்புகளில் உரிய மேம்பாலங்களும் உரிய அறிவிப்பு பலகைகள் வைக்கப்படவேண்டும் என்றும் தேசிய மாநில நெடுஞ்சாலைகளில் சாலைப்பாதுகாப்பு குறித்து மூன்றாம் நபர் தொழில்நுட்பக்குழு மூலம் தனிக்கை செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தேர்வு செய்யப்பட்ட Black spot யை சரிசெய்த பின் அவ்விடத்தில் விபத்துக்கள் ஏற்படுகின்றதா என்பதனை கண்காணிக்க வேண்டும்.

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் மாநிலத்தில் உள்ள அனைத்து சாலைகளின் ஓரமாக அமைந்துள்ள கிணறுகள் / குட்டைகளை கண்டறிந்து அவ்விடத்திற்கு தகுந்தார் போல தடுப்பு வேலி / crash barrier அமைக்கப்பட வேண்டும் என்றும் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் குறைந்த வெளிச்சம் உள்ள பகுதிகளில் நடுத்தர உயர் மின் கோபுர விளக்கு அமைத்தால் விபத்துகள் வெகுவாக குறையும் என்றும்.

தமிழகத்தில் அதிக விபத்துகள் ஏற்படும் இடங்களில் குறிப்பாக கரூர்–திருச்சி நெடுஞ்சாலையில் முத்தரசு நல்லூர் பகுதியிலும் கோவை–கரூர் நெடுஞ்சாலையிலும் அதிக விபத்துகள் மற்றும் உயிர் இழப்புகள் ஏற்படுவதால் அது சம்மந்தப்பட்ட துறையினர் அனைத்து நடவடிக்கையினையும் எடுக்க வலியுறுத்தினார் மேலும் நகர் புறங்களில் சாலைகளின் நடுவே அமைக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவர்கள் தொடங்கும் இடத்தில் கண்டிப்பாக பிரதிபளிக்கும் விளக்குகள் மற்றும் அறிவுப்புப் பலகை அமைக்க வலியுறுத்தினார்.

**போக்குவரத்து ஆணையர்/**
**சாலை பாதுகாப்பு ஆணையருக்காக**
**சென்னை 5.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

## TRANSPORT DEPARTMENT

| From | To |
|---|---|
| The Transport Commissioner/<br>Road Safety Commissioner,<br>Chepauk, Chennai-5. | The Director,<br>Information and Public Relation Department<br>Secretariat, Chennai-5. |

**R.No.31528/C1/2019** **Dated:27/08/2019**

Sir,

| | |
|---|---|
| **Sub:** | Road Safety – 8th meeting of State Road Safety council Meeting held on 27/08/2019 at 3.30 P.M. in the Chief Secretary's Conference Hall, II Floor, Secretariat – request for Press release – Regarding. |
| **Ref:** | From the Deputy Secretary to Government letter. R.No.40552/Tr.V/2019-1, dated:20/08/2019. |

*******

I am to enclose herewith a copy of the press release relating to the Road Safety issues discussed during the 8th meeting of State Road Safety Council held on 27/08/2019 in the Chief Secretary's Conference Hall, II Floor, Secretariat, Chennai -9. The above said information to be published in the leading Tamil and English dailies through I & PR Department.

**For Transport Commissioner/**
**Road Safety Commissioner**
**Chennai-5.**